(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்திற்காக கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங் கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் மற்றும் அது தொடர்பிலும் ஏற்புடையதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) ஜப்பானிய தொழில்நுட்பம் மற்றும் சேதன உர உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு அறவூட்டுமுகமாக இலங்கையில் மாதிரி விவசாய திட்டங்களை ஆரம்பித்து வைத்தல்;

(ஆ) உபகரணங்களை உபயோகிப்பது, அவசியமான துறையில் விவசாய உபகரணங்களை வழங்கி இளைய விவசாயிகளை கமத்தொழிலுக்கு ஆர்வமூட்டுவதன்மூலம் இலங்கையின் பொருளாதார விவசாய உற்பத்திகளை மற்றும் வினைத்திறனை அதிகரிப்பது;

(இ) இலங்கைவாழ் விவசாயத்துறை ஆசிரியர்கள் மற்றும் போதகர்களுக்கு ஜப்பானில் குறுகியகால பயிற்சித் திட்டங்களை அளிப்பது மற்றும் விவசாய துறையில் புதிய சவால்களுக்கு முகம்கொடுக்க அவர்களை ஊக்கு விப்பது;

(ஈ) சோளம் சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஏனைய தானியங்களை உற்பத்திசெய்வதற்கு ஊக்கம் மற்றும் உதவிகள் வழங்குவது;

(உ) புதிய சந்தைவாய்ப்புகளை அறிமுகம் செய்வது;

(ஊ) பால் உற்பத்தியினை முறைமைப்படுத்த மற்றும் விரிவுபடுத்த அவசியமான ஜப்பானிய தொழில் நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதோடு கால்நடை தீனிகளுக்குத் தேவையான கரிமச் சேர்மான மூலப்பொருட்களின் உற்பத்தியினை விரிவாக்கவும் சேவைகளை வழங்கவும் செயற்படுதல்;

(எ) கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக சைக்கிள் வண்டிகளை அன்பளிப்பு செய்வதோடு பாடசாலை உபகரணங்களை கொடுத்துதவுதல்; மற்றும் சிறுவர் பாடசாலைக் கல்வியினை மேம்படுத்துவதற்கு அவசியமானவற்றைச் செய்தல்;

(ஏ) அனர்த்தங்கள் மற்றும் வேறு விதமான சமூக நலனோம்புகை அவசியமான வேளைகளில் சர்வதேச உதவிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நடை முறைப்படுத்தல்;

(ஐ) வைத்தியசாலைகள், மருத்துவ சேவையில் ஈடுபாடுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அவசியமான சேவைகள் மற்றும் உபகரணங்களை வழங்கல்; அத்துடன்

(ஒ) மேற்படி குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வாறானவையும் அதன் இடைநேர்விளைவானவையும் அல்லது அதற்கு உகந்தவையுமான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் குறிக்கோள்களின் அமுலாக்கலில், கூட்டுத்தாபனம், அத்தகைய அமுலாக்கலானது இனம், மதம், சாதி, பால், அரசியற்கொள்கை, பிறப்பிடம் அல்லது ஏதேனும் அத்தகைய ஏதுக்கள் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உறுதிப் படுத்தல் வேண்டும்.

